## சென்னை–6, குடும்ப நல இயக்குநர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

**முன்னிலை: மரு.வி.பி.ஹரிசுந்தரி,எம்பிபிஎஸ்,டிசிஎச்.,**

ந.க.எண்.891/குந/நி1/2023 நாள்: 15 .03.2023

பொருள் நிர்வாகம் – தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம்–பணியிடை மரணமடைந்த திரு.எம்.குமார் என்பவரது மகள் திருமதி.கு.ரேவதி – இளநிலை உதவியாளர் பதவியில் 19.01.2022 அன்று முற்பகல் பணியில் இணைந்துள்ளார் – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை
1. இவ்வியக்கக பணிநியமன ஆணை எண்.3820/குந/நி1/2010, நாள்: 11.01.2022.
2. அரசாணை (நிலை) எண்.16, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, (Q1) நாள்.23.01.2020.

*******

ஆணை:

பார்வையில் கண்டுள்ள அரசாணை, மற்றும் அதன் தொடர்புடைய ஆணையின்படி தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் பொது விதிகள் 10 (எ) (i) ன் கீழ் திருமதி.கு.ரேவதி (த/பெ (லேட்) திரு.எம்.குமார், வட்டார சுகாதார புள்ளியியலாளர், அரசு ஆரம்ப சுகாதார நிலையம், பவுஞ்சூர், காஞ்சிபுரம் மாவட்டம்) என்பவர் கருணை அடிப்படையின் கீழ் தமிழ் நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராக சென்னை-06, குடும்ப நல இயக்ககத்தில் அரசுப் பணியில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம், பவுஞ்சூர், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், வட்டார சுகாதார புள்ளியியலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த திரு.எம்.குமார் என்பவர் 29.05.2010 அன்று பணியிடை மரணமடைந்துள்ளார் அவர் அப்பணியில் தகுதிகாண்பருவம் முடிக்கப் பெற்றவர். அவரின் பிறந்த தேதி 04.10.1956என்பதால் அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள்: 31.10.2014ஆகும். எனவே பணியிடை மரணமடைந்த அரசு ஊழியரின் மகள் திருமதி.கு.ரேவதி என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் தமிழ் நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் பணி வேண்டி உரிய காலகெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார். அவரின் பிறந்த தேதி 22.04.1988 அவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளதாலும், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்துள்ளதாலும் திருமதி.கு.ரேவதி என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பார்வை (1)-ல் காணும் இவ்வியக்கக பணிநியமன ஆணை வழி தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு சென்னை-06 குடும்நல இயக்ககத்தில் பணியமர்த்தப்பட்டார். தனியர் 19.01.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

தனியருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் இணைந்த நாளான 19.01.2022 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்து ஆணை வழங்க ஏதுவாக தனியர் மீது நாளதுவரை எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை என இவ்வியக்கக அலுவலக நடைமுறை பிரிவிலிருந்து சான்றளிக்கப்பட்டுள்ளது.

எனவே, பார்வை (2)-ல் காணும் அரசாணையின்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.கு.ரேவதி என்பவரின் தற்காலிக பணியினை தனியர் இளநிலை உதவியாளராக அவர் பணியில் இணைந்த நாளான 19.01.2022 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு வருட கால தகுதிகாண் பருவத்தினை தொடர்ச்சியான மூன்று ஆண்டு கால அவகாசத்திற்குள் முடித்திடல் வேண்டும். மேலும், இவர் தகுதிகாண் பருவம் முடிப்பதற்குள்ளாக தமிழ்நாடு மருத்துவ விதித் தொகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் மற்றும் அரசுப் பணியாளர் பயிற்சி நிலையம் பவானிசாகரில் அளிக்கப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியினை வெற்றிகரமாக முடித்திடல் வேண்டும். அதன் பின்னரே தனியருக்கு ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப் பெற அரசு விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

மரு.வி.பி.ஹரி சுந்தரி,
குடும்பநல இயக்குநர்.

பெறுநர்
திருமதி.கு.ரேவதி
இளநிலை உதவியாளர்,
குடும்பநல இயக்ககம்,
சென்னை -06.

நகல்
1. இவ்வியக்கக அலுவலக நடைமுறை பிரிவு / பட்டியல் பிரிவு
2. தனியரின் பணிப்பதிவேடு
3. இருப்புக்கோப்பு
4. உபரி.

உண்மை நகல்/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது

15/9/2023

கண்காணிப்பாளர்.

15/9/23